# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**இலங்கையிலுள்ள மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக கொழும்பில் நுழைவுத் தேர்வுகளை நடத்தும் மேகாலயா தேசிய சட்டப் பல்கலைக் கழகம்**

2022 மேகாலயா தேசிய சட்டப் பல்கலைக் கழக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மேகாலயா தேசிய சட்டப் பல்கலைக் கழகம், சட்டத் துறை சார்ந்த கல்வியில் எதிர்காலத்தை இலக்காகக் கொண்ட அணுகுமுறையை, இந்தியாவின் புதிய கல்விக் கொள்கைக்கு அமைய நடைமுறைப்படுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளது. அடுத்த தலைமுறை சட்ட வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களை பலதரப்பட்ட கல்வித் திட்டங்களின் மூலம் மேம்படுத்த இப்பல்கலைக் கழகம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

2. இந்நிலையில் 2024 கல்வி ஆண்டில் பட்டப் படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதி கற்கைநெறிகளைத் தொடர விரும்பும் மாணவர்களிடமிருந்து மேகாலயா தேசிய சட்டப் பல்கலைக் கழகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இதற்கான நுழைவுப் பரீட்சையானது கொழும்பு, இராஜகிரிய - கொஸ்வத்த வீதி இலக்கம் 185 இல் அமைந்துள்ள கேற்வே கல்லூரியில் 2024 ஏப்ரல் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. செயற்திறன் மிக்கதும் இலகுவில் அணுகக் கூடியதுமான சட்டக் கல்வியை நோக்கிய பயணத்திலும், அதேபோல இவ்விடயமானது இலங்கையில் உள்ள மாணவர்களை சென்றடைவதிலும் இது ஒரு முக்கிய நகர்வாக கருதப்படுகின்றது.

3. இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு திருமதி இதரிலங் சியேமிலியா அவர்களை குறித்த பல்கலைக் கழகத்தின் (+91-364-3507700 (Extension-35) / ida@nlumeg.ac.in) தொலைபேசி இலக்கம் மற்றும் இ மெயில் முகவரி மூலம் தொடர்புகொள்ளவும்.

**********************

**கொழும்பு**
**14 மார்ச் 2024**